(Chapter XXIII Code of Criminal Procedure)

IN THE COURT OF SPECIAL COURT FOR TRIAL OF CASES UNDER PREVENTION OF CORRUPTION ACT, SIVAGANGAI.

| | | |
|---|---|---|
| Case Number | : | Spl.C.C.No.1/2021 |
| Deposition Of Witness for | : | PW2 |
| Name | : | **Tr.Subbu** |
| Father's/Husband's Name | : | |
| Village | : | |
| Taluk | : | |
| Caste | : | |
| Calling | : | |
| Religion | : | |
| Age | : | |

Solemnly affirmed in accordance with the provisions of Oaths Act, 1969 (Central Act 44 of 1969) on the **27th February 2024.**

(எதிரி ஆஜர். It is recorded as directed by the Hon'ble High Court, Madras vide R.O.C.No.65929-A/2022/F1, P.Dis.No.17/2023 dt.23.01.2023.)

சாட்சி ஆஜர். சாட்சி சத்தியப்பிரமாணம் செய்து வைக்கப்பட்டார்.

**முதல் விசாரணை** :

1. நான் தற்போது சிவகங்கை மாவட்டம், காரைக்குடி வட்டம், இலுப்பக்குடி கிராமம், லட்சுமி நகர், காந்தி வீதியில் வசித்து வருகிறேன். நான் சிற்பத் தொழில் செய்து வருகிறேன். நான் சொந்தமாக

கல்லுப்பட்டறை வைப்பதற்காக வங்கியில் கடன் பெறுவதற்கு வருமானச் சான்றிதழ் வாங்குவதற்கு 06.02.2020 ல் கணினி வழியாக விண்ணப்பம் செய்தேன். எனது நண்பர் அன்பரசு என்பவரை வருமான வரிச் சான்றிதழ் தொடர்பாக இலுப்பக்குடி கிராம நிர்வாக அலுவலரை சந்திக்க சொன்னேன். அவர் 08.02.2020 ல் கிராம நிர்வாக அலுவலரை சந்தித்து உள்ளார். அப்போது கிராம நிர்வாக அலுவலர் எனது விண்ணப்பத்தை வருவாய் ஆய்வாளருக்கு அனுப்பிவிட்டதாகவும், வருவாய் ஆய்வாளரை சந்திக்கும்படியும் எனது நண்பரிடம் சொல்லியுள்ளார். அதனை எனது நண்பர் என்னிடம் சொன்னார்.

2. 10.02.2020 அன்று மதியம் 1.30 மணியளவில் சாக்கோட்டையில் உள்ள வருவாய் ஆய்வாளரை சந்திக்க சென்றேன். அங்கு அவரைப் பார்த்து நான் வங்கியில் கடன் வாங்குவதற்கு வருமானச் சான்றிதழ் வாங்க வந்திருப்பது குறித்துச் சொன்னேன். அவர் எவ்வளவிற்கு கடன் வாங்கப்போகிறீர்கள் என்று கேட்டார். நான் வருமானச் சான்று ரூ.72000/–க்கு விண்ணப்பம் செய்திருப்பதாகச் சொன்னேன். அதற்கு அவர் ரூ.96000/– க்கு விண்ணப்பம் செய்தால் தான் உனக்கு வங்கி கடன் கிடைக்கும் என்று சொன்னார். அதனை

தாசில்தாருக்கு அனுப்புவதற்கு ரூ.1000/- கேட்டார். நான் தற்சமயம் அவ்வளவு பணம் இல்லை என்று சொன்னேன். பரவாயில்லை 2 நாள் கழித்து கொண்டு வந்து கொடுங்கள் நான் விண்ணப்பத்தினை அனுப்பி வைக்கிறேன் என்று சொன்னார்.

3. வருமான வரிச்சான்று வாங்குவதற்கு ரூ.1000/- கொடுக்க வேண்டுமா என்று நினைத்து அந்த பணத்தை வருவாய் ஆய்வாளரிடம் கொடுக்க எனக்கு விருப்பம் இல்லை. 13.02.2020 அன்று காலை சுமார் 8.30 மணிக்கு சிவகங்கை ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு அலுவலகத்திற்கு வந்து 9 மணியளவில் வருவாய் ஆய்வாளர் மீது ரூ.1000/- லஞ்சம் கேட்பது குறித்து புகார் கொடுத்தேன். என்னிடம் காட்டப்படும் **13.02.2020 ம் தேதியிட்ட புகார் என்னால் கொடுக்கப்பட்டது. அது அ.த.சா.ஆ.2** ஆகும்.

4. நான் புகார் கொடுத்த பின்பு என்னை சிறிது நேரம் ஊழல் தடுப்பு போலிசார் அங்கேயே காத்திருக்கச் சொன்னார்கள். 10.30 மணியளவில் 2 பேர் வந்தார்கள். அவர்கள் அங்கிருந்த காவல் துணை கண்காணிப்பாளரிடம் பேசிக்கொண்டிருந்தார்கள். அவர்களை காவல் துணை கண்காணிப்பாளர் எனக்கு அறிமுகம் செய்து வைத்தார். ஒருவர்

பெயர் மோகன்தாஸ் என்றும் அவர் வேளாண் துறையில் இருப்பதாகவும், மற்றொருவர் பெயர் கார்த்திகேயன் என்றும் அவர் கால்நடைத் துறையில் உள்ளதாகவும் கூறினார். மேலும் அவர்கள் இருவரும் அரசு சாட்சிகள் என்று சொன்னார்.

5. அதன்பிறகு 2 டம்ளர்களை எடுத்து அதில் சோடியம் என்ற ஏதோ ஒன்று சொன்னார்கள். அதனை வைத்து சோதனை செய்து காண்பித்தார்கள். என்னிடம் இருந்த ரூ.1000/- ஐ கேட்டார்கள். அதனை நான் காவல் துணைக் கண்காணிப்பாளரிடம் கொடுத்தேன். அதனை காவல் துணைக் கண்காணிப்பாளர் அரசு சாட்சி கார்த்திகேயனிடம் கொடுத்து எண்ணச் சொன்னார். அவர் எண்ணிப் பார்த்ததும் கார்த்திகேயனின் கை விரல்களை அந்த டம்ளரில் நனைக்கச் சொன்னார். அவ்வாறு நனைத்த போது நிறம் எதுவும் மாறவில்லை. அதன்பிறகு அங்கிருந்த ஒரு காவலர் நான் கொடுத்திருந்த ரூ.1000/-ல் ( 2 ரூ.500/- தாள் ) பவுடர் மாதிரி ஒன்றை தடவினார். மறுபடியும் அந்த பவுடர் தடவப்பட்ட ரூபாய் நோட்டுகளை கார்த்திகேயனிடம் கொடுத்து எண்ணச் சொன்னார். அவர் எண்ணிப் பார்த்துவிட்டு எனது சட்டைப்பையில் எதுவும் இருக்கிறதா என்று பார்த்துவிட்டு அந்த ரூ.1000/- ஐ எனது

சட்டைப்பாக்கெட்டில் வைத்து விட்டார்.

6. அதன்பிறகு கார்த்திகேயனின் கைவிரல்களை அந்த கண்ணாடி டம்ளரில் நனைக்கச் சொன்னபோது இளஞ்சிவப்பு நிறமாக மாறியது. அதன்பிறகு அந்த டம்ளரில் இருந்த கரைசல்களை அழித்துவிட்டார்கள். அங்கு நடந்த நிகழ்வுகள் அனைத்தையும் எழுதினார்கள். அதில் என்னிடமும் காவல் துணை கண்காணிப்பாளர் மற்றும் 2 அரசு சாட்சிகள் ஆகியோரும் கையொப்பம் பெற்றார்கள். என்னிடம் காட்டப்படும் ஆவணம் தான் அப்போது தயார் செய்யப்பட்ட ஆவணம், அதில் நான் 4 கையொப்பம் செய்துள்ளேன். **ஒப்படைப்பு மகஜர் அ.த.சா.ஆ.3** ஆகும்.

7. என்னிடம் காட்டப்படும் ரூபாய் நோட்டுகள் தான் நான் போலிசாரிடம் ஒப்படைத்தேனா என்றால் ரூபாய் நோட்டுகளின் எண் ஞாபகமில்லை. இந்த ரூ.500/— நோட்டுகள் தான் நான் ஒப்படைத்தேன். அந்த **ரூபாய் நோட்டுகள் அ.த.பொ.சா.1** ஆகும். *(எதிரி தரப்பில் ரூபாய் நோட்டுகளின் எண்களை குறிப்பிடாததால் சான்றுப் பொருளாக குறியீடு செய்ய ஆட்சேபனை தெரிவிக்கப்படுகிறது.)*

8. காலை சுமார் 11.00 மணி முதல் 11.30 மணி இருக்கும்

சிவகங்கை ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு அலுவலகத்திலிருந்து நானும் 2 பெண் போலீசார், காவல் துணை கண்காணிப்பாளர், அரசு சாட்சிகளாக வந்த 2 பேர் என அனைவரும் ஜீப்பில் புறப்பட்டு புதுவயல் சாக்கோட்டைக்கு வருவாய் ஆய்வாளரை சந்திப்பதற்கு சென்றோம். புதுவயல் பேருந்து நிறுத்தம் அருகே மதியம் 1.30 மணியளவில் மேற்படி ஜீப்பை விட்டு என்னையும் அரசு சாட்சி மோகன்தாஸ் என்பவரையும் இறக்கி விட்டார்கள். மேலும் காவல் துணை கண்காணிப்பாளர் என்னிடம் வருவாய் ஆய்வாளரை சந்திப்பதற்கு மோகன்தாஸ் என்பவரையும் அழைத்து செல்லுங்கள், வருவாய் ஆய்வாளர் மோகன்தாஸை யார் என்று கேட்டால் அவர் எனது உறவினர் என்று சொல்லுங்கள் என்று அறிவுரை சொன்னார்.

9. இரசாயன பவுடர் தடவப்பட்ட பணம் ரூ.1000/- எனது சட்டையின் இடது பாக்கெட்டில் இருந்தது. சுமார் 1.45 மணியளவில் வருவாய் ஆய்வாளரின் அலுவலகத்திற்கு சென்று நான் வருவாய் ஆய்வாளரை சந்தித்தேன். என்னுடன் மோகன்தாஸ் வந்தார். அப்போது வருவாய் ஆய்வாளர் என்னிடம் எனது விண்ணப்பத்தை தாசில்தாருக்கு அனுப்புவதாகவும் ரூ.1000/- ஐ கொடுங்கள் என்று சொன்னார். நான்

வைத்திருந்த இரசாயன பவுடர் தடவப்பட்ட ரூ.1000/– ஐ எடுத்து வருவாய் ஆய்வாளரிடம் கொடுத்தேன். அவர் அந்த பணத்தை வாங்கி அவரது மேஜையின் மீது வைத்தார். ஏற்கனவே எனக்கு காவல் துணை கண்காணிப்பாளர் வருவாய் ஆய்வாளர் பணத்தை வாங்கிவிட்டால் எனது இடது கை முழுக்கை சட்டை மடிப்பை இறக்கி விட்டு சைகை செய்யும்படி சொல்லியிருந்தார். அதன்படி நான் எனது இடது கை சட்டை மடிப்பை இறக்கி விட்டு நடந்து போனேன். உடனே, காவல் துணை கண்காணிப்பாளர் மற்றும் பெண் போலிசார் அடங்கிய பார்ட்டிகள் வந்தார்கள்.

10. என்னிடம் யாரிடம் பணம் கொடுத்தீர்கள் என்று கேட்டார்கள் நான் வருவாய் ஆய்வாளரை அடையாளம் காண்பித்தேன். அதன் பிறகு என்னை போகச் சொல்லிவிட்டார்கள். நான் போய்விட்டேன். நான் அடையாளம் காட்டியபோது வருவாய் ஆய்வாளர் பதட்டமாக இருந்தார். என்னை வெளியில் இருக்க சொன்னார்கள். சிறிது நேரம் கழித்து என்னை போகச் சொல்லிவிட்டார்கள். நான் போய்விட்டேன். 14.07.2020 ல் காவல் ஆய்வாளர் என்னை அழைத்து விசாரித்தார். நடந்ததைச் சொன்னேன். என்னிடம் காட்டப்படும் முதல் தகவல்

அறிக்கையின் 2 வது பக்கத்தில் 14 வது Column ல் உள்ள கையொப்பம் என்னுடையதுதான்.

**குறுக்குவிசாரணை :** இல்லை.

"Taken down by me/before me in open Court, interpreted/read over to the witness and admitted by the deponent to be correct"

N SENTHIL MURALI

Digitally signed by N SENTHIL MURALI
Location: Sivagangai
Date: 2024.02.27 15:03:12 +0530

**Special Judge,**
P.C.ACT Cases,
Sivagangai.